# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 517/மா/2016

ஆணை எண். 96/2017

நாள் : 04/05/2017

03.06.2017 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி. – தாமாக முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

மண்டல அலுவலர்,
மண்டலம் – 6,
சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், 175–வது வார்டு, மாநகராட்சி மைதானத்தில் மாடுகள் கட்டி வைத்துள்ளது குறித்து " மாட்டு கொட்டகையானது மாநகராட்சி மைதானம்" என்று தலைப்பிட்டு 03.06.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியினை 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7 ன்கீழ் முறையீடாக எடுத்துக்கொள்ளப்பட்டு, 517/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டடது. மேற்படி செய்தி குறித்து மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் செயற்பொறியாளரின் வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், 175–வது வார்டு, மாநகராட்சி பூங்கா மற்றும் மைதானத்தில் நாள்முழுவதும் மாடுகளைக் கட்டி வைத்துள்ளதுடன், இரவு நேரங்களில் குடிமகன்கள் குடித்துவிட்டு மதுக்குவளைகளை வளாகத்தில் உடைத்துவிட்டுச் செல்கின்றனர் என்றும் மாநகராட்சி அதிகாரிகளுக்கு தெரிந்திருந்தும் இது குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அலட்சியம் செய்வதால் எதிர்காலத்தில் இம்மைதானம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக நேரிடும் என்று குறிப்பிட்டு தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தி குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அடையாறு மண்டல அலுவலர் வரமுடியாத நிலையில், அம்மண்டலத்தின் செயற்பொறியாளர் 14.02.2017 அன்று நடைபெற்ற விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளித்ததுடன், மண்டல அலுவலரின் அறிக்கையினையும் சமர்ப்பித்தார்.

2. அடையாறு மண்டலம், 175–வது வார்டு, எல்.பி.சாலையில் திருவேங்கடம் தெருவில் உள்ள மைதானத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்த மாடு ஒன்றினை, மாடு பிடிக்கும் வண்டி மூலம் பிடிக்கப்பட்டு புதுப்பேட்டை மாட்டு கொட்டகைக்கு அனுப்பப்பட்டது என்றும், இது சம்பந்தமாக

மாட்டின் உரிமையாருக்கு உரிய தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது என்றும் மண்டல அலுவலரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மாடு அகற்றப்பட்ட பின்பு, அம்மைதானத்தில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு சுகாதார சீர்கேடு ஏற்படாவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விளையாட்டுத் திடலில் இருந்த குப்பைகள் அனைத்தும் அகற்றப்பட்டு சுண்ணாம்பு தெளிக்கப்பட்டு தற்போது மைதானம் தூய்மையாக உள்ளதுடன், இரவு நேரங்களில் மைதானம் பூட்டி பாதுகாக்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மைதானம் மற்றும் விளையாட்டுத் திடலை மேம்படுத்தும் பொருட்டு ரூ.7.80 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 14.02.2017 அன்று நடைபெற்ற விசாரணையின்போது, மண்டல அலுவலரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விவரங்களை செயற்பொறியாளரிடமும் உறுதி செய்யப்பட்டது.

3. இந்நேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டு மைதானம், அடையாறு மண்டல அலுவலகத்தின் அருகிலேயே அமைந்துள்ளது. மேலும், மண்டலத்தின் மையப்பகுதியில் உள்ள மைதானத்தை உரிய முறையில் பராமரிப்பது மாநகராட்சியின் கடமையாகும். நாளிதழில் செய்தி வெளியிட்ட பின்பே மைதானத்தை முறைகேடாகப் பயன் படுத்துவதை தடுக்க மாநகராட்சி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மாநகராட்சி விழிப்புடன் செயல்பட்டு, நாளிதழ்களில் செய்தி வெளியாகும் முன்பே, இது போன்ற முறைகேடுகளை தடுத்து நிறுத்தியிருந்தால் மண்டல அலுவலர்களின் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியதாக இருந்திருக்கும். எனினும், தற்போது ரூ.7.80 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மைதான அபிவிருத்தி பணியினை சீராக மேற்கொண்டு பொதுமக்கள் மற்றும் சிறுவர்கள் பயன்படும் வகையில் மைதானத்தை சீரமைக்க வேண்டும் என அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, மே திங்கள், 4–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் வாய்மையே வெல்லும் சென்னை–600 032

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

8.5.17

பெறுநர்

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 13,**
**அடையாறு மண்டலம்,**
**சென்னை மாநகராட்சி,**
**எண்.115, டாக்டர் முத்துலட்சுமி சாலை,**
**சென்னை – 600 020.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்